இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரீகம்!!
ஆதிக்க ஆடைகளின் சோபிக்க சோபனா
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கை மணவாளிகளுக்கு தேவையான பட்டுப் புடைவைகள் மற்றும் இருவர்களுக்கான தெரிவுகளுக்கு
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 16 வியாழக்கிழமை (01 – 09 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 278

# பொருளாதாரத் தடையை புதிய அரசு தளர்த்தியது

## 28 வகை பொருள்கள் மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டது

கொழும்பு, செப்டெம்பர் 1

வடபகுதி மீது முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி விதித்திருந்த பொருளாதாரத் தடையை திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தலைமையிலான புதிய அரசு தளர்த்தியிருக்கிறது.

தடைசெய்யப்பட்ட 42 வகைப் பொருள்கள் அடங்கிய பட்டியலிலிருந்து 28 வகைப் பொருள்களை நீக்குவது தொடர்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா நேற்று அறிவித்தார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு அமைக்கப்பட்ட பின்னர் பிரதமர் சந்திரிகாவின் அமைச்சரவை நேற்றுக் காலை முதன் முதலாக கூடியது.

அதன் பின்னர் கொழும்பு விசும்பாயவில் அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிப்பதற்கான செய்தியாளர் மாநாட்டை பிரதமர் சந்திரிகா கூட்டினார்.

அந்த மாநாட்டிலேயே பொருளாதாரத் தடையைத் தளர்த்துவது தொடர்பான புதிய அமைச்சரவையின் முடிவை பிரதமர் வெளியிட்டார்.

பொருளாதாரத் தடையை தளர்த்தியது தொடர்பான அறிவிப்பு உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் அவர் சொன்னார்.

தடை நீக்கப்படாத—தடை உத்தரவு தொடர்பான பட்டியலில் எஞ்சியுள்ள —



பொருள்கள், வெடிகுண்டுகளையும் வெடிமருந்துகளையும் தயாரிக்கப் பயன்படுத்தக் கூடியவை எனக் கருதப்படுவதால் அவற்றின் மீதான தடையை நீக்க முடியாதிருப்பதாக அவர் மேலும் சொன்னார்.

செய்தியாளர் மாநாட்டில் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவுடன் நீதி மற்றும் அரசியலமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா, தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சின் செயலாளரும், லேக்ஹவுஸ் தலைவருமான லயனல் பெர்னாண்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பற்றரிகள், இரும்பு உருக்குப் பொருள்கள், பெற்றோல் டீசல், யூரியா, மோட்டார் வாகனங்கள் போன்றவை தொடர்ந்து தடை செய்யப்பட்ட பொருள்களாக இருப்பவற்றில் அடங்குகின்றன. (ஓ-உ-எ-கூ3-6)

## தடை நீக்கப்பட்ட 28 பொருள்கள் விவரம்

கொழும்பு, செப். 1

தடை நீக்கப்பட்ட 28 பொருள்களின் விவரம் வருமாறு:-

- ★ சவர்க்காரம்
- ★ விறகு
- ★ மண்ணெண்ணெய்
- ★ தரத்தில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்கள்
- ★ வானொலி அதற்கான உதிரிப்பாகங்கள்
- ★ தேங்காய் எண்ணெய்
- ★ பிஸ்கட்டுகள்
- ★ சொக்கிலேட்
- ★ தாவர எண்ணெய்
- ★ சூரிய சக்தி உபகரணங்கள்
- ★ செவிப்புல கஸட் நாடாக்கள்
- ★ சுகாதாரத் துவாய்கள்
- ★ வர்ணப் பூச்சுகள் (பெயின்ற்)
- ★ சைக்கிள் ஆகியவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
- ★ என்ஜின் ஒயில்
- ★ சைக்கிள்கள் அதற்கான டயர்கள், ரியூப்புகள்
- ★ ஜெனரேட்டர்கள்
- ★ நீரிறைக்கும் இயந்திரங்கள் அதற்கான உதிரிப்பாகங்கள்
- ★ சிமெந்து
- ★ பிளாஸ்டிக் பாவனைப் பொருள்கள்
- ★ மோட்டார் வாகன டயர்கள், ரியூப்புகள்
- ★ அச்சகத்துக்கான கடதாசி, தட்டச்சு மற்றும் பிரதிபண்ணும் கடதாசி
- ★ றோனியோ இயந்திரங்கள் பிரதிபண்ணும் இயந்திரங்கள்
- ★ மாணவர்களுக்கான பாடசாலை பைகள்
- ★ சத்திரசிகிச்சை உபகரணங்கள்
- ★ மருந்து வகைகள்.
- ★ பொலித்தீன்
- ★ மெழுகுவர்த்தி (ஓ-3)

## போர் நிறுத்தம் குறித்து ஆராய வேண்டியுள்ளது!

### பிரதமர் சந்திரிகா சொல்கிறார்

கொழும்பு, செப். 1

"விடுதலைப் புலிகளுடன் அரசப் படைகள் யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்து கொள்வது என்ற விடயம் மேலும் ஆராயப்பட வேண்டியதொன்று."

—இவ்வாறு கூறினார் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க.

நேற்று செய்தியாளர் மாநாட்டில் யுத்த நிறுத்தம் குறித்து கேட்கப்பட்ட போதே அவர் இப்படிக் கூறினார்.

யுத்த நிறுத்தம், அரசியல் தீர்வு, பொருளாதாரத் தடை நீக்கம் என்பன தொடர்பாக போர் முனைகளில் உள்ள இராணுவத் தளபதிகளின் கருத்துக்களை அறியும் நோக்குடன் அவர்களை இன்று மாநாடு ஒன்றுக்கு பிரதமர் அழைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. [உ-எ-6]

## டி. பி. தலைமையில் எடுக்கப்பட்ட தீர்மானம்

கொழும்பு, செப். 1

பொருளாதாரத் தடையை தளர்த்துவது தொடர்பான முடிவை மேற்கொண்ட நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்துக்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவே தலைமை வகித்தார்.

அவரின் அனுமதியுடனேயே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக "வெரித்தாஸ்" வானொலி அறிவித்தது. (உ-எ-6)

## கடற்படை பீரங்கிக்கு பொலிகண்டியில் ஒருவர் பலி

வல்வெட்டித்துறை, செப். 1

வடமராட்சிக் கடற்பிரதேசத்தில் நேற்று அதிகாலையும் பின்னர் காலை 7.00 மணியளவிலும் கடற்படையினர் மிக மோசமான முறையில் தாக்குதல்களை நடத்தினர். குடியிருப்புப் பகுதிகளை நோக்கியும் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது.

பொலிகண்டி ஆலடிப்பகுதியில் விழுந்து வெடித்த ஒரு பீரங்கிக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார்.

குண்டு ஒன்று தென்னை மரத்தில் மோதி வெடித்துச் சிதறியது. குண்டுச் சிதறல் வாலிபரின் கழுத்தை தாக்கியதால் அவர் படுகாயமடைந்து, பின்னர் மந்திகை ஆஸ்பத்திரியில் மரணமானார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த தங்கராசா நேசன் என்பவது பீற்றர் (24 வயது) என்பவரே பலியானவர் ஆவார்.

இவர் பொலிகண்டிக்கு உறவினர் ஒருவரின் வீட்டுக்கு வந்த சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-155-173-15)

### பாதுகாப்பு வலயத்துக்குள் ஊடுருவி

## கடற்படையினர் மீனவரை பிடித்துச் சென்றனர்!

### பருத்தித்துறையில் சம்பவம்

பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியில் நேற்றுக் காலை 7.25 மணியளவில் கடற்படையினர் கடும் தாக்குதலை நடத்தினர்.

பின்னர் இறங்கு துறையில் பாதுகாப்பு வலயப் பகுதியில் ஊடுருவி தாக்குதல் நடத்திய போது, அங்கு தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவரை கடற்படையினர் பிடித்துச் சென்றனர்.

கட்டுமரத்திற்கு கயிறை வீசி மீனவரை படையினர் தமது படகில் ஏற்றிக்கொண்டு வெற்றிலைக்கேணிப் பக்கமாகச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான செல்லத்துரை செல்வராசு (33 வயது) என்பவரே படையினரிடம் அகப்பட்டுக் கொண்டவர் ஆவார்.

இவரது கட்டுமரம் மற்றும் வலைகள் என்பன கைவிடப்பட்ட நிலையில் பின்னர் மீட்கப்பட்டன. (ஓ-173-155)

## புலிகளின் ஆக்கபூர்வ பதிலை பிரதமர் எதிர்பார்க்கிறாராம்!

கொழும்பு, செப். 1

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது. பொருளாதாரத் தடை தொடர்பான புதிய அரசின் நடவடிக்கை இதனையே எடுத்துக் காட்டுகின்றது.

ஆக்கபூர்வமான விதத்திலும் —

நிபந்தனையற்ற விதத்திலும் —

விடுதலைப் புலிகள் பதில் நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

— இவ்வாறு கூறினார் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க.

பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டது குறித்து செய்தியாளர்களுக்கு நேற்று தகவல் வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளில் ஒன்றாகவே இந்த நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது.

அரசுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் வாழும் மக்களின் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தடை நீக்கம் செய்யப்பட்டுள்ள பொருள்களை மக்களுக்கு சுமுகமாக விநியோகிப்பதில் விடுதலைப் புலிகளும் ஆயுதபாணிகளான ஏனைய இயக்கத்தினரும் ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று நான் நம்புகின்றேன்.

சில ஆயுதந்தாங்கிய குழுக்கள் பொருள் விநியோகத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்னும் சொற்பகாலத்துக்கே ஏனைய பொருள்கள் மீது தடை

கொழும்பு, செப். 1

தொடர்ந்தும் தடை செய்யப்பட்டுள்ள பொருள்கள் பற்றரிகள், பெற்றோல், உரம் போன்றவையாகும்.

இவற்றின் மீதான தடை இன்னும் சொற்பகாலத்துக்கு நடைமுறையில் இருக்கும் என்று கருதப்படுகிறது.

இவ்வாறு பி.பி.ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்வி தமது கண்ணோட்டத்தில் தெரிவித்தார்.

வடபகுதி மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் மீண்டும் நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதற்கு எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் சந்திரிகா, பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டது பற்றிய அறிவிப்பை வெளியிட்டுப் பேசுகையில் கூறியுள்ளார்.

இந்த அறிவிப்பு அந்தப் பாதையில் ஒரு சிறு முயற்சி என்று கூறப்படுகிறது. — இவ்வாறு பி.பி.ஸி. தெரிவித்தது (உ-எ)

### முச்சந்தி முனி




## பூநகரிப் பாதையை திறப்பது குறித்தும் பிரதமர் ஆராய்வார்

கொழும்பு, செப். 1

குடாநாட்டு மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்களை குறைக்கும் நோக்குடன் பூநகரிப்பாதையைத் திறப்பதற்கான சாத்தியங்கள் குறித்தும் பிரதமர் சந்திரிகா பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆராயவிருக்கிறார்.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று இந்த வகையை வெளியிட்டிருக்கிறது.

கிளாலி கடல் மார்க்கமான பயணம் செல்வதில் உள்ள அவலங்களை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன் பிரதமர் படை அதிகாரிகளுடன் இது குறித்துப் பேசவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-3)

## கொழும்பில் தமிழ்க் கட்சிகள் வரவேற்பு

கொழும்பு, செப். 1

பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டதை தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி. ஆர். எல். எவ். ஈ.பி.டி.பி. ஆகிய தமிழ்க் கட்சிகள் வரவேற்றுள்ளன. (உ-எ)

## அரசுடன் இணைந்து செயல்பட டி.பி.முடிவு?

கொழும்பு, செப். 1

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட ஜனாதிபதி விஜேதுங்கா முன்வந்திருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

புதிய லஞ்ச ஆணையாளராக திருமதி நெலும் கமகேயை மீண்டும் நியமிப்பது என அமைச்சரவை நேற்று முடிவு செய்தது குறித்து தகவல் வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நெலும் கமகேயை லஞ்ச ஆணையாளர் பதவியில் இருந்து நீக்குவது என்ற முடிவை எடுத்த ஐ.தே.க. அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவே தலைமை வகித்தார்.

அவரே கமகேயை மீண்டும் லஞ்ச ஆணையாளராக நியமிப்பது என்ற முடிவை எடுத்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அமைச்சரவைக் கூட்டத்துக்கும் நேற்று தலைமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### புதிய அரசு பதவிக்கு வந்தபின்

## தமிழர் கைதாவது திடீரென கொழும்பில் குறைந்தது!

யாழ்ப்பாணம், செப். 1

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் கொழும்பில் தமிழர் கைதுகள் குறைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்சமயம் விடுதிகள், வீடுகள் சுற்றி வளைக்கப்படுவது குறைந்துள்ளதாகவும் —

தமிழ்மக்கள் அச்சம் இன்றி நடமாட முடிவதாகவும் — அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை — கடற்படையினரின் வீதிச்சோதனைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு 'ஓவ்செட்' அச்சு இயந்திரம்

யாழ்ப்பாணம், செப். 1

யாழ். பல்கலைக்கழகத்துக்கு நோர்வேயில் உள்ள தமிழர்கள் அன்பளிப்பு செய்த "ஓவ்செட்" அச்சு இயந்திரம் இங்கு வந்துசேர்ந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அமரர் அ. துரைராஜா நோர்வே சென்ற சமயம் நடத்திய பேச்சுக்களின் பயனாக நோர்வேயில் உள்ள ஈழத்தமிழர்கள் அன்பளிப்பு செய்த பணத்தில் இருந்து இந்த அச்சு யந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது.

10 லட்சம் ரூபா பெறுமதியான இந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு கொழும்பில் பல மாதங்கள் தேங்கிக் கிடந்து கப்பல் மூலமாக எடுத்து வரப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ் பல்கலைக்கழகத்துக்கு 10 கம்பியூட்டர்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

### யாழ். மாவட்டத்தில்

## பாண் விலையை குறைப்பது குறித்து நேற்று ஆராய்வு

### அடுத்த வாரம் முடிவு அறிவிக்கப்படும்

யாழ்ப்பாணம், செப் 1

யாழ். மாவட்டத்தில் பாணின் விலையை குறைப்பது குறித்து நேற்று செயலகத்தில் கூடி ஆராயப்பட்டது.

ஒரு றாத்தல் பாணை 5 ரூபாய்படி விற்கும்படி கூட்டத்தில் கலந்து கொண்ட பேக்கரி உரிமையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் —

தமக்கு இறாத்தல் கூடுதல் விலை முடிவதால் இந்த விலைக்கு விற்பது கஷ்டமாக இருக்கும் என பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

இதுகுறித்து அடுத்த வாரத்தில் மீண்டும் ஆராய்ந்து விலை நிர்ணயிக்கப்படும் என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை — தற்போது கையிருப்பில் இருக்கும் மா பழைய விலைக்கே விற்கப்படும் என்றும் —

அடுத்த வாரம் எடுத்து வரப்படும் மா இறாத்தல் 7 ரூபாவுக்கு விற்கப்படும் என்றும் — அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஓ-3)

### பூநகரி வீழ்ச்சி மற்றும் ஊழல்களை மறைக்க

## இராணுவ சதிப் புரட்சி என கட்டுக்கதை பரப்பப்பட்டது

### விசாரணைக்கு கோருகின்றார் லக்கி

கொழும்பு, செப் 1

பொதுத் தேர்தல் தினத்தன்று இராணுவச்சதிப்புரட்சி ஒன்று நடத்த திட்டமிடப்பட்டிருந்தது என பத்திரிகைகளுக்கு தகவல் வெளியிட்டவர் யார் என்பதை கண்டுபிடிக்க விசாரணை நடத்தும்படி இராணுவ தலைமை நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறார்.

இராணுவத்தளபதி ஜெரி டி சில்வா மற்றும் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் லேணக அனுருத்த ரத்வத்தை ஆகியோர் ஊடாக இக்கடிதத்தை மேஜர் ஜெனரல் லக்கி அல்கம ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தார்.

சதிப்புரட்சி ஒன்றை நடத்த திட்டமிடப்படவில்லை என்றும் அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"சதிபற்றிய செய்தியின் பின்னால் உள்ள உண்மையைக் கண்டறிய உடனே விசாரணை ஒன்றுக்கு உத்தரவிடுங்கள்" — என்றும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இச்சதியில் சம்பந்தப்பட்டதாக பத்திரிகைகளில் வெளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இல 211, 213 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் இரண்டடைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இரு கடைகளையும் பல அறைகளையும் உள்ளடக்கி வியாபார மையத்தில் அமைந்துள்ளது. தொடர்பு: டாக்டர் எஸ்; சிவராமலிங்கம், இல. 457, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (32639)

புதிய பிலி, பிளேன் தார சேற்றக்கர், புதிய பிளைவுட் பலகைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 272 (358), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32624)

சிங்கர் டீப்பிறீசர் 300 லீற்றர், 400 லீற்றர் (Singer Deep Freezer, 300 Litres, 400 Litres) விற்பனைக்கு உண்டு. இல. 27 [157/1], ஸ்ராலின் வீதி, யாழ்ப்பாணம். (32646)

வதிரி உக்கினநொச்சலை அம்மன் கோயில் சூழலில், அரசடிப் பாடசாலை, நெல்லியடி பட்டினசபை, நூலகங்களுக்கருகாமையாக வதிரி- இக்கம் பிரதான வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய பெரிய வீடு காணியுடன் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும் எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு: ஆறுமுகம் பேக்கரி, வதிரி, கரவெட்டி. (32652)

பிறிமா புறொயிலர் இறைச்சிக்கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. (மல்வம் உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன் வீதியூடாக) லிங்கம் லேன், உடுவில். (32660)

### புத்தகங்கள்

மாணவர்கள் பேச்சு கட்டுரைகளில் முன்னேற உதவும் நூல் ''என்னாலும் பேச முடியும்'' குழந்தைகளுக்கான பாடல்கள் ''ரோஜாப் பூ'' ''பூந்தோட்டம்'' அறிவு விருத்திக்கு ''நொடியும் விடையும்'' நல்லூர் உற்சவ காலத்தில் ஸ்ரீகாந்த, பூபாலசிங்கம், பாலாஜி புத்தகசாலைகளில் பெறலாம். நூலாசிரியர்: சேசப்பாய் சிவம். (32605)

### உற்சவகால விற்பனை

இந்திய, இலங்கை நாவல்கள் தொகையாகவும், சில்லறைக்கும், சிவம் நீதிக் கதைகள், 1, 2, 3, 4, 5, 6 பாகம் புதியவை. சமய புராணப் புத்தகங்கள், இந்திய சஞ்சிகைகள் விற்று முடிப்பதற்கான மலிவு விலையில் ஸ்ரீகாந்த புத்தகசாலை, நல்லூர் [சி-8678]

### சேவல் விற்பனைக்கு

தடுப்பு ஊசி ஏற்றப்பட்ட ஒரு மாதம் வளர்ச்சி அடைந்த பிறவுன், கறுப்பு சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. மகிலாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32644)

### மணிக்கூடு திருத்துதல

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக்கொடுக்கப்படும். உதிரிப்பாகங்களுக்கான மணிக்கூடுகள் வாங்கப்படும். குடும்ப அட்டையுடன் வரவும். சகல மணிக்கூடு பற்றறிகளுமுண்டு. ஜெஸ் வாச் வேக்ஸ், 18, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் சந்திக்கருகில். (7621)

### அவசர தேவை

அரசாங்க ஆசிரியர்கள் தனியான குடியிருப்புக்கு சமையலறை, மலசலகூட வசதிகளுடன் தனிப் பாதையுடனான பகுதி வீடு, ஒன்றரை வருடங்களுக்கு திருநெல்வேலி, நல்லூர், கந்தர்மடம், கொக்குவில் பகுதிகளில் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும் இல. 688, பே/பா உதயன், யாழ்ப்பாணம் (32643)

### வெளிவந்துவிட்டது

துரித மீட்டலுக்கான சைவநெறி வினா-விடை ஆண்டு 11 ஆக்கம்: க. சந்திரசேகரம் வெளியீடு:- சோதி புத்தகசாலை, கச்சாய் வீதி, சாவகச்சேரி ஏகவிநியோகத்தர்கள்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-8930)

### பாலர் ஆசிரியராக

விரைவில் பயிற்சி க.பொ.த. (சா/த) சனி ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் கற்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (7737)

### தபால் மூலம் கல்விசேவை

3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L. A/L வகுப்புகளுக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. (ஒரு வினாத்தாள் 3/- மட்டும்) வீட்டில் வைத்து விடையளித்துத் தந்தால் திருத்தி விடைகளுடன் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படும். விவரங்களுக்கு: பதிவாளர், கல்விச் சேவைப் பிரிவு, Bond, யாழ்ப்பாணம். (7728)

---

## பேராதனை பல்கலைக்கழகத்திற்கான
## B. A.
**விரிவுரைகள் ஆரம்பம்: 03 - 09 - 1994** (11 மணி)

## G. A. Q மீட்டல்
(டிசம்பர் பரீட்சைக்கான)
**விரிவுரைகள் ஆரம்பம்: 03 - 09 - 1994** (12 மணி)

## யாழ். பல்கலைக்கழகத்திற்கான
## G. A. Q.
விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

விவரங்களுக்கு:
S. அருள் நங்கை,
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். [சி-9003]

---

## ஓராண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 | 12 |
| 02 | 09 |
| 1968 | 1993 |

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
### அமரர் மயூரதநாதன் தம்பிஐயா
(அப்பன்)
திதி: 01 – 09 – 1994

''அன்பும் பண்பும் நிறைந்து
ஆக்கமுடன் இயங்கியே
உன்னதமாய் வாழ்வதற்கு
வழிகாட்டியாய் - மயூரா
இல்லையே! இப்போது
இனி எப்போது காண்போம்
- அறிகிலோமே!''

உன் பிரிவால் வாடும்;
அப்பா, அம்மா,
சகோதரர்கள், உறவினர்கள்.

958/24, தலையாளி லேன்,
யாழ்ப்பாணம். (32632)

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணுறவு | விண்ணுறவு |
|---|---|
| 18 | 04 |
| 01 | 09 |
| 1917 | 1991 |

தவநெறி நடந்து அரனடியடைந்த
### திருமதி நாகம்மா செல்வரத்தினம்
(இளைப்பாறிய ஆசிரியை)
திதி: 01-09-1994

ஆண்டு மூன்று ஆனபோதும் உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும் அகலாது நிலைத்திருக்கும். அருபமாய் இருந்தும் எம்மை வழி நடத்திச் செல்லும் எங்கள் அன்பு அன்னையே! இறைவன் கமலத்தில் இதழ் தூவி இறைஞ்சுகின்றோம் அஞ்சலியாக.

உங்கள் பிரிவால் துயருறும்;
கணவர்
(ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்ட்),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''செல்வமஹால்''
பத்தமேனி,
அச்சுவேலி. (32655)

---

# A/L DAY CLASS
(A/L 94 பரீட்சைக்குத்
தோற்றியவர்களுக்காக)
திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி
நாட்களில்

| | | |
|---|---|---|
| 8-00 — | CHEMISTRY — | திரு. குமரன் |
| 9-00 — | PHYSICS — | திரு. விஜிதன் |
| 10-15 — | BOTANY — | திரு. கபில் |
| | PURE — | திரு. குணம் |
| 11-15 — | ZOOLOGY — | திரு. சுரேஷன் |
| | APPLIED — | திரு. குணம் |

மாதாந்த பயிற்சிப் பரீட்சைகள் +
விளக்கங்களுடன்
**ஆரம்பம்: 01 - 09 - 1994**
**BOND கல்வி நிறுவனம்,**
(7731) யாழ்ப்பாணம்.

---

## விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
## மகளிர் பிரிவு
நடத்தும்
## திலீபன் 7 ஆம் ஆண்டு
# நினைவுப்போட்டிகள்

1994-09-26 லெப். கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர்களிடையே சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடத்த விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

### போட்டி விதிமுறைகள்

*கீழ்ப்பிரிவு:*

01. கவிதைகள் பதினைந்து வரிகளுக்கு உட்பட்டதாகவும், கட்டுரைகள் ஐம்பது சொற்களுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.
02. படைப்புக்களின் உட்பொருள்
    அ. லெப். கேணல் திலீபனின் ஈகம்
    ஆ. இந்திய இராணுவத்தின் கொடுமைகளால் தமிழ் மக்கள் அடைந்த துன்பம் என்பன வற்றுள் ஒன்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

*மத்திய பிரிவு*

01. கவிதைகள் இருபத்தைந்து வரிகளுக்கு உட்பட்டதாகவும், சிறுகதை கோட்டுத்தாளின் இரண்டு பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், கட்டுரை இருநூறு சொற்களுக்குள் அமைய வேண்டும்.
02. படைப்புக்களின் உட்பொருள்.
    அ. லெப். கேணல் திலீபனின் ஈகம்,
    ஆ. இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலங்களில் தமிழ் மக்கள் புலி வீரர்களைக் காத்த விதம்;
    இ. லெப். கேணல் திலீபனின் விரச்சாவின்போது மக்களிடையே ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பும், இந்திய எதிர்ப்பு உணர்வும் என்ற விடயங்களுள் ஒன்றை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

*மேற் பிரிவு*

01. கவிதைகள் நூறு சொற்கள் வரையிலும், சிறுகதை கோட்டுத்தாளின் ஐந்து பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், கட்டுரைகள் கோட்டுத்தாளின் ஐந்து பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், அமைய வேண்டும்.
02. படைப்புக்களின் உட்பொருள்,
    அ. லெப். கேணல் திலீபனின் ஈகம்
    ஆ. இந்தியா எம்மண்ணுக்குச் செய்த துரோகம்
    இ. எமக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்ட காலத் தொடர்புகள் இன்றைய நிலமை,
    ஈ. இந்தியா இராணுவம் எம் மண்ணுக்கு வந்த தற்கான பின்னணி.
    உ. உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை எம்மண்ணில் இருந்து அகற்றுவதற்காக தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்க்கமான நடவடிக்கைகளுக்கும், புலிகளின் நுண்ணிய போர்த்திறனும்;
    ஊ. இந்திய இராணுவம் புலிகளிடம் எவ்வாறு தோற்றது என்ற விடயங்களுள் ஒன்றை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

கீழ், மேல், மத்திய பிரிவுகளுக்கான பொதுவான விதி முறைகள்.

01. படைப்புக்களைத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
02. ஒருவர் எத்தனை படைப்புக்களையும் அனுப்பலாம்.
03. போட்டியாளர் தனது
    அ. பெயர்
    ஆ. பாடசாலையின் பெயர்
    இ. கல்வி கற்கும் ஆண்டு
    ஈ. வகுப்பாசிரியர் அல்லது அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பம்.
    என்பவற்றைத் தனியே ஒரு தாளில் எழுதி, படைப்புக்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
    உ. கடித உறையின் இடது பக்கத்தில் தியாகி திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவுப் போட்டி என குறிப்பிடல் வேண்டும்.
04. படைப்புக்கள் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பப் பட வேண்டும். விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புச் செயலகங்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
05. போட்டி முடிவு திகதி 10-09-1994 முடிவு திகதிக்கு பிந்தி வரும் ஆக்கங்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.
06. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
07. மாவட்ட ரீதியாக சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டியில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்கள் தெரிவாகும். மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகளும், சான்றிதழும் வழங்கப்படும்.

வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரின் படைப்பாற்றலை வெளிக் கொண்டு வரும் முகமாக நடத்தப்படும் இப் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறும் அனைத்து தமிழீழ மாணவர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு,
மகளிர் பிரிவு
(சி-8922)

---

## ஆண்டு -4
(புலமைப் பரிசில் -1995)
**ஆரம்பம்: 01 - 09 - 1994**

★ வருடந்தோறும் - புலமைப்பரிசில், அனுமதிப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டித் தரும் ஆசிரியர் குழு.
★ வாராந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்
ஆரம்பம்: 01 — 09 — 1994
**BOND** கல்வி நிறுவனம்.
யாழ்ப்பாணம். (7733)

---

## கோலப் பயிற்சி

நல்லை ஆதீனத்தினால் கோலப் பயிற்சி அளித்து சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் 10-09-1994 மாலை 2 மணிக்கு பயிற்சி ஆரம்பமாகும். இதில் பங்குபற்ற விரும்புவோர் தங்கள் பெயர்களை முன் கூட்டியே மேற்படி ஆதீனத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

-நல்லை ஆதீனம்.

[32658]

---

## O/L - 94
3 மாதகால- முழுப்பாடத்திட்டத்திற்கான மீட்டல் பயிற்சி வகுப்புகள் மாதாந்த மதிப்பீட்டுப் பரீட்சைகளுடன்
**ஆரம்பம்: 01 - 09 - 1994**
**BOND கல்வி நிறுவனம்**
[7732]

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 18 | 01 |
| 08 | 09 |
| 1928 | 1991 |

### திருமதி திரேசா பொன்னுத்துரை

ஆண்டு மூன்று ஆனபோதும் உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும் அகலாது நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள் உறவினர்கள்;
பேரப்பிள்ளைகள்.

இல.94 4 ஆம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம். (32653)

---

## 31ஆம் நாள் அந்தியேட்டியும்
## அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| ● | 04 |
| ● | 08 |
| ● | 1994 |

### திருமதி இராசநாயகி பாலசுந்தரம்

04-08-1994 அன்று காலமான திருமதி இராசநாயகி பாலசுந்தரம் (காலஞ்சென்ற பொன். பாலசுந்தரம் J. P. விதானையாரின் மனைவி) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 03-09-1994 சனிக்கிழமை காலை 6 மணிக்கு அன்னாரது 3ஆம் சந்தி, தொண்டமனாறு இல்லத்தில் நடைபெற்று, தொண்டமனாறு ஆற்றில் அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அன்புடன் அறியத்தருகிறோம்.

அன்னாரது ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தனிப்பட்ட அழைப்பு அனுப்ப முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நன்றி:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

3ஆம் சந்தி,
தொண்டமனாறு. [32659]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இவர்களும் தமிழர்களா?

யாழ். மாவட்டத்தை விட்டு வெளியேறும் அரசாங்க அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் தமது சொந்த நலன்களை நிறைவேற்றுவதற்காக கொழும்பில் சிங்கள அதிகாரிகளிடம் இங்குள்ள நிலைமை குறித்து பிழையான தகவல்களைக் கொடுக்கிறார்கள் என்று ஓய்வுபெற்றுச் செல்லும் இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் திரு. க. கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இப்படியானவர்களின் நடத்தையினால் வங்கிகள், அரச திணைக்களங்களின் தலைவர்கள் கொழும்பில் யாழ். மாவட்ட மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்து கொள்ள முடியாதிருக்கிறது என்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

1990 ஜூனில் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமான பின்னர் யாழ். மாவட்டத்தில் இருந்து எத்தனையோ அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச்சென்று விட்டனர்.

இவர்களில் தானாக இடமாற்றம் கிடைத்துச் சென்றவர்கள் சிலரே. இடமாற்றம் கேட்டுச் சென்றவர்கள் – பின் கதவால் காரியங்களைச் சாதித்தவர்களே – அதிகம் எனலாம்

யுத்தத்தில் சிக்கிக்கொள்ளாமல் கொழும்பில் பாதுகாப்பாக வாழலாம்—

கஷ்டங்களில் இருந்து தப்பிக்கொள்ளலாம்—

தமது குழந்தைகளை இடையூறின்றிப் படிப்பிக்கலாம்— என்று இவர்களில் பலரும் கருதினார்கள்.

எவ்வளவு தூரம் இவர்களின் அபிலாஷைகள் நிறைவேறினவோ தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் உண்மை.

சொந்த மண்ணில் வாழ்ந்த போது இருந்த நிம்மதியை இழந்த நிலையிலேயே இவர்களில் அனேகர் வாழ்ந்து வருகிறார்கள். கொழும்பில் இளம் சமுதாயத்தினர் மத்தியில் போதைவஸ்து போன்ற தீய பழக்கங்கள் பரவிவருவது இவர்களுக்கு மற்றொரு பெரிய சவால்.

இக்கட்டான நிலையில்—

மக்களுக்குச் சேவையாற்ற வேண்டிய நேரத்தில்—

மக்களைக் கைவிட்டு செல்லும் சுயநலன் மிக்க துரோகத் தனத்தை இங்கிருந்து வெளியேறிச் செல்லும்போது இவர்களில் பலரும் உணரவில்லை.

வைத்தியத்துறை, வங்கித்துறை, தொழில்நுட்பத்துறை உட்பட சகல துறைகளிலும் இப்படியான பாதிப்பு இருந்து வருகிறது.

இங்கிருந்து வெளியேறிச் சென்ற இப்படியானவர்களில் சிலரே கொழும்பில் இருந்து கொண்டு யாழ். மக்களைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதாவது அற்ப, சொற்ப சலுகைகளைப் பெறுவதற்காக சிங்கள அதிகாரிகளுக்கு இவர்கள் துணைபோகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் வரை போராட்டத்துடன் இசைவாக இருப்பதாகக் காட்டிக்கொண்டு கொழும்பு சென்றவுடன் இவர்கள் தொப்பியைப் புரட்டுகிறார்கள். இப்படியான அதிகாரிகள் கண்டிக்கப்பட வேண்டியவர்களே.

கடந்த அரசாங்கம் புதுப் புதுப் பொருட்களுக்கு அடிக்கடி விதித்து வந்த தடைகளுக்கும் இப்படியானவர்களின் தகவல்களும் காரணமாக இருக்கலாம்.

யுத்தம் ஆரம்பமான பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய பல்லாயிரக்கணக்கான சாதாரண மக்களிலும் அனேகர் இந்த வகையினரே.

கடந்த பொதுத்தேர்தலில் இவர்களில் பெரும்பாலானோரின் வாக்குகள் பேரினவாதக் கட்சிகளுக்குக் கிடைத்தது இவர்களின் நோக்கங்களைப் புரிய வைக்கிறது.

ஆகவே இவற்றில் இருந்து ஒன்று மட்டும் புலனாகிறது.

அரசாங்க அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் சரி சாதாரண மக்கள் சரி இந்த மண்ணை நேசிப்பவர்களே இந்த மண்ணில் இன்னும் தங்கி உள்ளார்கள். போராட்ட வெற்றியின் பெரும் பங்கும் இவர்களையே சாரும்.

### எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சிந்தனைக்கு ஒப்பான

# மாற்றுத்திட்டம் ஒன்று உருவாகும் வரை மாகாணசபை முறை தொடர்ந்து அமுலில்!

## சபாநாயகர் கே. பி. இரத்னாயக்கா பேட்டி

கொழும்பு, செப். 1

பிராந்திய சபைகளை நிறுவும் பண்டா—செல்வா உடன்படிக்கையை கைச்சாத்திட்ட போது காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சிந்தனையில் இருந்ததற்கு ஒத்தான உகந்த மாற்று அதிகாரப் பரவலாக்கல் திட்டம் ஒன்று உருவாக்கப்படும்வரை, தற்போதைய மாகாணசபை முறை தொடரும்'.

புதிய சபாநாயகர் கே. பி. இரத்னாயக்கா சண்டே ஒப்சேர்வருக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாணசபை முறை பணத்தை விரயம் செய்யும் திட்டமாகும் என்று நீங்கள் முன்னர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தீர்கள். இன்னும் அப்படி நம்புகின்றீர்களா? — என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்—

"ஆம். ஐ. தே. க. அரசு இந்த முறையை கொண்டு வந்த போது நாம் அதனை எதிர்த்தது உண்மையே. இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இம்முறை கொண்டு வரப்பட்டது. ஆனால் எங்கு அது முழு நடத்தப்பட்டிருக்க வேண்டுமோ அங்கு அமுல் நடத்தப்படவில்லை. மாகாணசபையைக் கொண்டுவந்ததன் நோக்கமே தோல்வி கண்டுவிட்டது.

நடுப்பக்கத்தில் ஏனைய மாகாணங்களில் இம்முறை திணிக்கப்பட்டது. இதனால் ஏனைய ஏழு மாகாணங்களிலும் அபிவிருத்தி வேலைகளிலும் பார்க்க ஆளும் கட்சிப் பணிகள் தான் அதிகமாக இடம்பெற்றன.

மாகாணசபை முறையை ஒளித்துவிட்டு, அடிமட்டத்தில் கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்கும் திட்டத்தை அமுல் நடத்துவதே எமது கொள்கையாகும்.

பண்டா—செல்வா ஒப்பந்தம் மாவட்டங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கக் கூடியதாக தயாரிக்கப்பட்டது"—என்று அவர் தெரிவித்தார்.

வடக்கு ஒரு சபை, கிழக்குக்கு ஒரு சபை என்ற உங்கள் நிலைப்பாடு இன்னும் நீடிக்கிறதா என்ற கேள்விக்கு—

"வடக்கு-கிழக்கு போன்ற பரந்த பிரதேசத்துக்கு இணைப்பு சாத்தியமல்ல என்பதே எனது வாதமாகும். ஒரே மொழி பேசும் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் பிராந்திய சபைகளை நாம் நிறுவ வேண்டும்"—என்றார்.

அவர் மேலும் சொன்னதாவது: வடக்கு-கிழக்கு நெருக்கடியை தீர்ப்பது என்று நாம் திடசங்கற்பம் கொண்டுள்ளோம். சிங்கள மக்கள் மட்டுமல்ல, தமிழர்களும் யுத்தத்தினால் களைத்துவிட்டனர். இதனைத்தவிர, பெருந்தொகைப் பணம் யுத்தத்துக்காக செலவிடப்படுகிறது. உயிரிழப்பு அதிகரித்து வருகிறது. இறந்த படையினரின் குடும்பங்களையும் ஊனமடைந்தவர்களையும் பராமரிப்பது அரசுக்கு மேலதிக சுமையாக உள்ளது.

இராணுவத் தீர்வு இப்பிரச்சினைக்கு நிரந்தரப் பரிகாரமாக அமைய முடியாது என்பதே என் அபிப்பிராயமாகும். இராணுவத் தீர்வு காணப்படின் பிரச்சினை மீண்டும் மீண்டும் தோன்றியபடியே இருக்கும். இராணுவ நடவடிக்கையுடன் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு நெருக்கடி விரிவடைந்ததற்கு கடந்த கால ஐ. தே. க. அரசுகளே காரணமாகும். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐ. தே. க. அரசு அக்கறை காட்டவில்லை. ஏனைய இடங்களுக்கு பரவவிடாமல் ஆனையிறவுக்குள் இப்பிரச்சினையை ஜெயவர்த்தனாவினால் கட்டுப்படுத்தியிருக்க முடியும். சுத திரக்கட்சிக்கு எதிரான கட்சிகளை தமது பக்கம் இழுத்தெடுத்த ஜெயவர்த்தனா, இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் நாட்டம் காட்டவில்லை.

சபாநாயகர் என்ற முறையில் நாட்டில் உள்ள அனைத்து மக்களையும் இன, மத பேதமின்றி அணைத்துச் சென்று சமாதானத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவதே எனது முதல் பணியாக இருக்கும்.

இவ்வாறு சபாநாயகர் தெரிவித்தார். (ஐ-எ)

## புதிய வரவு செலவுத் திட்டம் அடுத்த ஆண்டு முற்பகுதியில்!

கொழும்பு, செப். 1

நவம்பர் மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய — அடுத்த வருடத்திற்கான—வரவு செலவுத் திட்டத்தை—

அடுத்த ஆண்டு முற்பகுதியில் சமர்ப்பிப்பது என தற்போது முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வேளையில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதும் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதும் நெருக்கடியானதாக இருக்கும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே —

இடைக்கால கணக்கு அறிக்கை ஒன்றை இப்போதைக்குச் சமர்ப்பித்துவிட்டு—

வரவு செலவுத் திட்டத்தை அடுத்த ஆண்டு முற்பகுதியில் சமர்ப்பிக்க புதிய அரசு விரும்புவதாகக் கூறப்படுகின்றது. (உ-9)

## மாவட்டங்கள் தோறும் விளையாட்டு பாடசாலை

### விளையாட்டுத்துறை அமைச்சர் தகவல்

மாவட்டம் தோறும் விளையாட்டுப் பாடசாலைகள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். மாணவருக்கென விசேட ஊட்டச்சத்து உணவுத் திட்டம் ஒன்றும் அமுல் நடத்தப்படும்.

விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

விளையாட்டுகளில் திறமை காட்டும் கிராம மாணவர்கள் நல்ல வசதிகள் உள்ள பாடசாலைகளில் சேர்ந்து படிக்க புலமைப்பரிசில் வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ-எ)

### பிரதமராக வருவதற்கு முன்னரே

## சந்திரிகாவுக்கு பூச்செண்டு சேபால அனுப்பினாரா?

பிரதமராக வருவதற்கு முன்னர் இடம்பெற்ற சந்திரிகாவின் பிறந்த தினத்துக்கு ஜெனரல் சேபால ஆட்டிகல வாழ்த்துத் தெரிவித்து மலர்க்கொத்து அனுப்பினாரா?

இக் கேள்வி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அடிபடுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரான ஜெனரல் ஆட்டிகல தற்போது எயர்லங்கா நிறுவனத்தின் தலைவராக இருந்து வருகிறார்.

இது குறித்து ஜனாதிபதி விஜேதுங்கா ஆட்டிகலவை அழைத்து, விஷயம் உண்மை தானா என்று கேட்டார். அதற்கு சேபால —"மலர்க்கொத்து எதுவும் அனுப்பப்படவில்லை. என்னைச் சிக்கலுக்குள் மாட்டி வைக்க யாரோ ஒருவர் செய்த சதி"— என்று ஜனாதிபதிக்குத் தெரிவித்தார். (ஐ எ)

## நல்லூர் கண்காட்சியில்

நல்லூர் திருவிழாவில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் கண்காட்சியில் தற்கால சூழ்நிலையில் இலகுவாகப் பெறக் கூடிய பல சக்தி வளங்கள் பொறிமுறைப்படுத்தி சக்திப் பகுதியினரால் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

எமது எதிர்கால சக்தியை எப்படி அடைதல் என்ற நீண்ட நோக்க பார்வையில் ஆய்வு செய்து தற்கால சூழ்நிலையில் இந்த பொறிமுறைகளை எவ்வாறு அமைத்து இயக்குவது என்பது தொடர்பான விளக்கங்களும் அங்கு மக்களுக்கு தெரிவிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## கைத்தொழில் சந்தையில்

எமது தேசத்தின் தன்னிறைவு நோக்கிய பொருண்மிய வளர்ச்சியை காட்டும் பல உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் நல்லூர் கைத்தொழில் சந்தையில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படும் இக் கண்காட்சியில் வட தமிழீழத்திலுள்ள பெரும்பாலான கைத்தொழில் நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திகள் வைக்கப்பட்டுள்ளன.

உள்ளூர் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் முகமாக ஒழுங்கு செய்யப்பட்ட இக் கண்காட்சியினை பெருமளவான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். பல புதிய உற்பத்திகள் மக்களுக்கு அறிமுகப்படுத்துவதுடன் அவற்றிற்கான பரந்த சந்தை வாய்ப்பும் இதன் மூலம் ஏற்பட்டுள்ளது (க)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடக்கும் நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி இருபத்தியோராம் திருவிழாவான இன்று ஆலயச் சுற்றாடலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:

நாவலர் மணிமண்டப முன்றிலில் தெய்வீக இசையரங்கு:

மாலை 6-7 மணி வரை — ராதிகா சுப்பிரமணியம் — இசைக்கச்சேரி. மாலை 7—8-30 மணிவரை வி.கே நடராஜா இசைக்கச்சேரி

நல்லை ஆதீனத்தில்

காலை 9-30 மணிக்கு சமய இட்டை

பிற்பகல் 3 மணிக்கு சமயப் பேருரை

பிற்பகல் 3 மணிக்கு புராணப்படிப்பு

மாலை 4 மணிமுதல் சோதிடமும் - வாழ்வியலும் ஆய்வுரை

இரவு 6—7 மணி வரை பிரசங்க பூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தியின் கந்தரனுபூதியில் "விதிகாணும் உடலை விடாவினையேன்" என்ற தலைப்பில் இசைப் பேருரை

மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில்

மாலை 5-30 மணிக்கு சம்பூர்ண ராமாயணம் தெய்வீக இசைப் பேருரை "இராமயாணம்" என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா

தித்திக்கும் முத்தமிழ் அரங்கில்

இரவு 8-30 மணிக்கு வைத்திய கலாநிதி கெங்காதரன் குழுவினரின் புல்லாங்குழலிசை

சங்கீத பூஷணம் — பொன் சுந்தரலிங்கத்தின் இசைக்கச்சேரி (ஐ-30)

### புலிகளின் குரல் வானொலியில்

01 – 09 – 1994

வியாழன் இரவு

- ★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்த மருத்துவக் குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் - சுண்ணாம்பு உற்பத்தி தொடர்பான கேள்வி பதில்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — ஏட்டிலிருந்து - "வெற்றிக்குச் சமுதாய விஞ்ஞானம்" என்ற நூலிலிருந்து "விண்ணைப் பார்த்தால்" எனும் கட்டுரையின் சில பகுதிகள்
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

02 – 09 – 1994

வெள்ளி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப் பாடல்கள்

## தலதா மாளிகைக்கு பிரதமர் பொன்மாலை

கொழும்பு, செப் 31

பிரதமர் பதவியை ஏற்ற பின்னர் முதல் தடவையாக கண்டிக்கு விஜயம் செய்த திருமதி சந்திரிகா தலதா மாளிகைக்கு பொன்மாலை ஒன்றையும் ஒரு லட்சம் ரூபாவையும் அன்பளிப்பாக வழங்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது

இத்தகவலை தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரத்னா திவயின பத்திரிகைக்குத் தெரிவித்தார். [ஐ-எ-6]

## விறகு தறிப்பதற்கான நடைமுறை ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், செப். 1

விறகு தறிப்பதற்கான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய செய்திக் குறிப்பு ஒன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ளது.

செய்திக் குறிப்பு கூறுவதாவது:

இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்த நாள் முதல் யாழ். குடா நாடு ஒரு பொருளாதார முற்றுகைக்கு உள்ளாகியுள்ளது. இந்நிலையில் வன்னியிலிருந்து குடா நாட்டிற்கு விறகு வருவது தடைப்பட்டதனால் தமக்குரிய விறகினை பெறுவதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கினர். இந்நிலையில் பொது மக்களும் விறகுத் தேவையை முதன்மையாகக் கொண்டு செயற்படும் நிறுவனங்களும் தனியார் அமைப்புகளும் போட்டி போட்டு பயன்தரு மரங்களை அழிக்க வேண்டிய நிலையேற்பட்டது:

இதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் துரிதமாக செயற்பட்டதன் விளைவாக கடந்த ஆண்டு இறுதிப்பகுதி முதல் விறகுக்காக மரம் தறித்தல், கொண்டு செல்லல் ஆகியவற்றுக்கு அனுமதிப் பத்திர முறை கொண்டு வரப்பட்டது யாவரும் அறிந்ததே.

அத்துடன் மரம் தறித்தலை ஒருமுகப்படுத்தும் பொருட்டு தென்மராட்சியில் ஒரு விறகு விற்பனை நிலையம் திறக்கப்பட்டு விறகு கொள்வனவாளர்க்கு விற்பனை செய்யப்பட்டும் வருகிறது.

இந்த நடவடிக்கையினால் கூடுதலான மரங்கள் தறிக்கப்படுவது தவிர்க்கப்படுவதுடன் இதன் மூலம் பெறப்படும் நிதி திட்டமிட்ட வகையில் மரக்கன்றுகளை மீள் நடுகை செய்வதற்கும் சூழல் தொடர்பான மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

இதன்படி தென்மராட்சி விறகு விற்பனை நிலையத்தில் விறகினை கொள்வனவு செய்து கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தை பனைவட்ட விசேட உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் உள்ளூரில் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு விறகு எடுத்துச் செல்வதாக இருந்தாலும் அனுமதி பத்திரம் பெறுதல் வேண்டும் எனவும் இதற்குரிய விண்ணப்பபடிவத்தினை அதற்கென நியமிக்கப்பட்டுள்ள வட்ட விசேட உத்தியோகத்தரிடம் பெற்று விண்ணப் பங்களை பூர்த்தியாக்கி அனுமதி பெறுதல் வேண்டும். 24 மணித்தியாலங்களே செல்லுபடியாகும் இவ் அனுமதிப்பத்திரத்தினை ஒரு தடவை மட்டுமே பயன்படுத்த முடியும் எனவும் வழங்கப்பட்ட அனுமதி விறகு கொண்டு செல்வதற்கு முன்னரே காலவதியாகும் பட்சத்தில் அனுமதி வழங்கிய வட்ட விசேட உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்படல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இத்தகைய ஒழுங்கு விதிகளை மீறி விறகு கொண்டு செல்லப்படுவது கண்டு பிடிக்கப்படின் அவர்கள் தமிழீழ காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு கொண்டு செல்லப்படும் விறகின் மூன்று மடங்கு பணப் பெறுமதி அறவிடப்படுவதுடன் விறகும் பறிமுதல் செய்யப்படும்.

இதே தென்னை பனை மட்டைகள் சருகள் போன்றன கொண்டு செல்வதற்கு அனுமதிப் பத்திரம் தேவை இல்லை எனவும் இது பற்றி மேலதிக விவரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்டத் தொடர்பாளர் அலுவலகங்களில் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள வட்ட விசேட உத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

## நல்லூரை நோக்கி பாத யாத்திரை

யாழ்ப்பாணம் செப். 1

நல்லூர் கந்தசுவாமி கோயில் 3தர்த் திருவிழாவை ஒட்டி சப்ததீவக திவ்ய ஜீவன சங்க சமாஜத்தினர் ஆண்டு தோறும் நடத்தும் பஜனைப் பாதை யாத்திரை நாளை வெள்ளி அதிகாலை அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பாதயாத்திரை யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளூடாகவும் சென்று எதிர்வரும் 4ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி கோவிலை அடையும்,

பாத யாத்திரை செல்லும் பாதைகளில் உள்ள ஆலயங்கள் தோறும் யாத்திரைக் குழுவினர் சென்று விசேட பஜனை செய்வர். நாட்டின் நன்மை கருதி பிரசாதங்களிலும் அவர்கள் ஈடுபடுவர். (ஐ)

# யுத்தம் முடிவுக்கு வரும் நாளை அனைவரும் எதிர்பார்த்துள்ளனர்

## அஸ்கிரிய பீடாதிபதி சந்திரிகாவிடம் தெரிவிப்பு

"வடக்கு—கிழக்கு யுத்தம் முடிவுக்கு வரும் தினத்தை இந்த நாட்டின் அனைத்து இன மக்களும் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்"

அஸ்கிரிய பீடாதிபதி பலிபான சந்தானந்த மகா நாயக்க தேரர் முன்கண்டவாறு, தம்மைச் சந்தித்து ஆசி பெற்ற பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவிடம் தெரிவித்தார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்பும் பாரிய பொறுப்பை மக்கள் புதிய அரசிடம் ஒப்படைத்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

கடந்த இரண்டு தசாப்தங்களாக வடக்கு — கிழக்கில் யுத்தம் நடந்து வருகிறது. யுத்தம் இல்லை என்று ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்தாலும் பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்; அங்கவீனர்களாகியுள்ளனர் இந்த யுத்தத்தினால் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழ்பவர்கள் மட்டுமல்ல, முழுநாட்டு மக்களுமே பீதியடைந்து உள்ளனர்.

நாட்டின் வளர்ச்சிக்கு செலவிடப்படவேண்டியபணம் யுத்தத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

1989 இல் நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டில் இந்த யுத்தத்தை தீர்ப்பதற்கான ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன என்றாலும் அப்போதைய ஜனாதிபதியினால் இது தொடர்பாக கவனம் செலுத்தப்படவில்லை காரணமாக யுத்தம் நீடிக்கிறது.

இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சந்தர்ப்ப வாதிகளல்லாத, மத்தியஸ்தம் வகிக்கும் எவரினதும் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படவேண்டும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழ், முஸ்லிம் மக்கள் சிங்கள மக்களுடன் சகோதரர்களாக வாழ்ந்தனர்; வாழ்ந்தும் வருகின்றனர். அரசியல்வாதிகளின் பதவி ஆசை காரணமாகவே இப் பிரச்சினை ஏற்பட்டது. இது தொடர்பாக சமாதான பேச்சுகள் நடைபெற வேண்டும். இவ்வாறான பேச்சுகளை திரு. பிரபாகரனும் அவரது ஆதரவாளர்களும் ஏற்றுக் கொள்வார்களோ தெரியவில்லை. அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் பலன் இட்டாது.

ஏனைய சமூகத்தவர்களுக்கு பாரபட்சம் காட்டாது, பெரும்பான்மைச் சமூகத்தின் உரிமைகளை உறுதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்;

இனம், மதம் தொடர்பான விஷயங்களில் பொறுப்பு வாய்ந்த மதத் தலைவர்களின் அபிப்பிராயங்களுக்கு அரசு செவிமடுக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பிரதமரும் அவரது அரசும் திட்டமிட்டபடி தமது பணிகளை துணிச்சலாக வெற்றியுடன் முன்னெடுத்துச் செல்ல வாழ்த்துவதாகவும் மகாநாயக்கர் தெரிவித்தார்.

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## தமிழரை ஆட்சியில் அமர்த்திடுக!

செந்தமிழ் யாழ்நகர் சேந்தனே நல்லூரச்,
சிவக்கனலே முருகா!
இந்தமண் ஈழமண் எங்களின் சொந்தமண்
எமக்கது உரிமையன்றோ!
வந்தவை எதிரிகள் தம்படை ஆட்சியில்
வரித்திட விடலாமோ!
கந்தனே வந்தனை செய்துனை வாழ்த்துறோம்
கனத்துணை யாயெழுக!
உந்துதல் தந்துனர் புலிப்படை மறவர்க்கு
உயிர்த்துணை யாய்வளர்க!
முற்றுறு அவுணரை அடக்கிய வேலொடு
முழுத்துணை நீதருக!
சிந்தனை உன்மலர் பாதமே கந்தனே
சீக்கிரம் நீவருக!
அந்தமிழ் உன்படை எழுச்சியால் தமிழரை
ஆட்சியில் அமர்த்திடுக!

— முருகனடியான்.

கொடை வளமாம் பனை வளத்தின் சிறப்பை நல்லூர் பொருண்மியக் கண்காட்சி விளக்குகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோலி பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம் (வ/து)
புலோலி கிழக்கு, பருத்தித்துறை

## பதவி வெற்றிடம்

### பொது முகாமையாளர் பதவி
### 165/88 - 101/9

சங்கத்தின் மேற்படி பதவிக்கு 02 - 08 - 94இல் உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட விளம்பரத்தின் விண்ணப்ப முடிவுத் திகதி 15-08-94இ 10-09-94வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகிறோம்.

(இ/9004)



## கலை வர்த்தக கல்லூரி

## C. C. A.

374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

### A/L 94

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான பகல் நேர வகுப்புக்கள் (Day Class) ஆரம்பம்.

### எமது ஆசிரியர் குழு

பொருளியல் — திரு. உதயன்
கணக்கியல் — திரு ஸ்ரீ
வர்த்தகம் — பிரபல ஆசிரியர்
அளவையியல் — திரு. சயந்தன்
தமிழ் — திரு. கணேஷ்
புவியியல் — திரு. வேலா
இந்து நாகரிகம், இந்து சமயம் — திரு. ஜோதீஸ்வரன்
அரசியல் — திரு. பஞ்சு
கிறிஸ்தவம் — திரு. றொபேட்
நாடகமும் அரங்கியலும் — திரு. திலகநாதன்

### ஆரம்பம்:- 10 - 09 - 1994 சனி

குறிப்பு
(1) வாரத்தில் 4 மணித்தியாலம் வகுப்புக்கள் நடைபெறும்.
(2) மாணவர்கள் முற்கூட்டிய பதிவினை மேற்கொண்டு அனுமதியை பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகி

(சி / 9005)



## கண்ணீர் அஞ்சலி

நாவற்குழி பெரியதம்பிரான் ஆலயத்தில் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக பிரதம பூசகராகக் கடமையாற்றி கடந்த 29 - 08 - 1994 திங்கட்கிழமை சிவபதமடைந்த திருநெல்வேலியைச் சேர்ந்த

### பூசகர் அமரர் இ. ஆறுமுகம்

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு, ஆலயப் பொதுச்சபையினர் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

ஆலயப் பொதுச்சபையினர்

பெரியதம்பிரான் ஆலயம்,
நாவற்குழி.

(32663)



## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 28 — 09 — 1973
உதிர்வு: 13 — 09 — 1993

### செல்வி சிவலிங்கம் உஷா
(காங்கேசன்துறை)
திதி: 01 - 09 - 1994

எங்கள் அன்புச் செல்வமே உஷா நீ எம்மை விட்டு பிரிந்து இறைவனடி சேர்ந்து ஓராண்டு சென்றாலும் எங்கள் இதயங்களை விட்டு என்றுமே நீங்க முடியாது.

உம்மை பிரிந்து வாடும்:
அப்பா, அம்மா,
சுவிஸில் இருக்கும் அண்ணா,
ரமேஸ், தம்பிமார்: சுபாஸ்,
ரூபதாஸ், தங்கைகள்: றஜிதா,
ராஜிதா.

சிவலிங்கம் (நித்தி)
சம்பந்தப்பிள்ளையார் வீதி,
ஆனைக்கோட்டை.

(32621)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01 - 09 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பொதுத் தேர்தலின் பின்னர

# மலையகத் தொழிலாளர் மீது அச்சுறுத்தல் அதிகரிப்பு!

கொழும்பு, செப். 1
பொதுத் தேர்தலின் பின்னர் மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் மீது அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

மாத்தளை மாவட்டத்தில் லக்கல தொகுதியைச் சேர்ந்த பிரே தோட்டத்தில் உள்ள தொழிலாளர்கள் மீது இனந்தெரியாத கோஷ்டி தாக்குதல் நடத்தியதாகவும் —

அங்கிருந்த தோட்டத் தொழிலாளர்கள் 3 நாட்கள் இரவு நேரத்தில் காட்டில் தஞ்சமடைந்திருந்ததாகவும் —

பின்னர் அவர்கள் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்து அங்கு தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இரத்தினபுரியில் உள்ள கபரகல எவருள்ள கொலனியில் இருந்த தோட்டத் தொழிலாளிகளின் குடியிருப்புகள் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் —

இருவர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதாகவும் —

தொடர்ந்த கல்விச்சுக இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

## 'அத்த' விடம் 1 கோடி ரூபா நஷ்டஈடு கேட்கிறார் காமினி

அத்த பத்திரிகை மீது ஒரு கோடி ரூபா நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்கா சட்டத்தரணி மூலம் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

''அத்த'' பத்திரிகையின் ஓகஸ்ட் 24 இதழில் வெளியான கட்டுரை ஒன்று தொடர்பாகவே இந்த அறிவித்தலை ''அத்த'' ஆசிரியருக்கு அவர் அனுப்பியிருக்கிறார்.

காமினி தம்மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான பைலின் போட்டோ பிரதிகளை சட்டவிரோதமாக பெற்றுக் கொண்டதாகவும் —

லஞ்ச ஆணையாளர் நெவல் விஜேநாயக்காவை காமினி இரகசியமாக சந்தித்ததாகவும் —

அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## தபால் பொதிகள் இன்று இறக்கப்படும்

தற்சமயம் காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் 'கோமரி' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள தபால் பொதிகள் இறக்கப்பட்டு நாளை முதல் தபாலகங்களில் விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## செஞ்சிலுவை பிரதிநிதி இன்று யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், செப். 1
செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதியாக புதிதாக நியமனம் பெற்றுள்ள திரு. மெக்கோ அல்த்தார் இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

'பிளாம்பயான்' கப்பல் மூலம் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் இவர் ஒரு வாரம் இங்கு தங்கியிருப்பார்.

விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள், செயலக அதிகாரிகள், யாழ். ஆஸ்பத்திரி அதிகாரிகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினர் ஆகியோரைச் சந்தித்து இவர் விவரங்களை கேட்டறிவார். (ஓ-3)

## தபால்களை சேர்க்குக!

யாழ்ப்பாணம், செப். 1
இன்று பருத்தித்துறைக்கு வந்து திரும்பும் ''பிளாம்பயான்'' கப்பலில் தபால்கள் எடுத்துச் செல்லப்படவிருப்பதால் தபால்களை இன்று காலை 8 மணிக்கு முன்னர் பிரதம தபாலகத்தில் சேர்க்குமாறு பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார். (ஓ-3)

இராணுவ...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யான செய்திகளில் பிரஸ்தாபிக்கப்பட்ட — படை அதிகாரிகள் சிலரும் இது போன்ற கடிதங்களை இராணுவத்தலைமைக்கு அனுப்பவிருப்பதாகவும் 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இச் சதிமுயற்சியில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட படை அதிகாரிகளில் சிலர் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் 9 ஆவது மற்றும் 21 ஆவது படையணிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அப்படி ஒரு சதிமுயற்சி இடம் பெற்றிருப்பின் அதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க இராணுவத் தலைமைப் பீடம் உடனே விசாரணை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்றும் சில இராணுவ வட்டாரங்கள் கேட்டுள்ளன.

பூநகரி இராணுவ முகாம் வீழ்ச்சி மற்றும் டெண்டர் முறைகளை அனுசரிக்காது ரஷ்ய நிறுவனம் ஒன்றிடம் இருந்து பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முயற்சித்தது ஆகிய சம்பவங்களை மூடிமறைக்கும் ஒரு நடவடிக்கையாக, ஆக் ஜொண்டிசேர் சதிப்புரட்சி முயற்சி என்ற கதைகளைப் பரப்பிவருவதாக சில வட்டாரங்கள் நம்புகின்றன.

தாய்லாந்தில் இலங்கைத் தூதராக உள்ள முன்னாள் இராணுவத்தளபதி சிசில் வைத்தியரத்னா தேர்தல் தினத்துக்கு முன்பதாக மூன்று தினங்கள் கொழும்பில் தங்கியிருந்ததைத் தொடர்ந்தே சதிப்புரட்சி பற்றிய வதந்தி பரவத்தொடங்கியது. (உ-எ)

ஒக்.20 - நவ.20 இடையில் நடைபெறும்

## ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளர் டி.பியே

### கட்சியின் செயலர் அறிவிப்பு

எதிர்வரும் ஒக்டோபர் 20 ஆம் திகதிக்கும் நவம்பர் 20 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு தினத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்.

ஏற்கனவே தீர்மானித்தபடி ஐ.தே.க. வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதியான டி.பி. விஜேதுங்காவே போட்டியிடுவார்,

ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறார்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவது குறித்து ஐ.தே.கவின் தற்போதைய நிலைப்பாடு என்னவென்று கேட்கப்பட்டபோது —

இது குறித்த இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றார் அவர்.

'கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்து அத்தகைய ஆட்சிமுறையை நீக்க வேண்டும் என இருக்குமாயின் அத்தகைய முறையை நீக்கும் முயற்சிக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்' — என்றும் அவர் சொன்னார்.

'இத்தகைய முடிவு ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு முரணாக உள்ளது அல்லவா?' — என்று கேட்கப்பட்ட போது —

அதிகாரப் பரவலாக்கல் நடைமுறைக்கு நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை அனுசரணையாக இருக்கிறது என்ற காரணத்தினால்தான் அந்த முறை தொடர்ந்து இருக்க நாம் ஒப்புக் கொண்டோம்' — என்று அவர் பதிலளித்தார். (உ-9)

இப்படியும் பகல் கொள்ளை

## முன்னாள் அமைச்சர்களின் வாகன கருவிகள் மாயம்!

### உதிரிப்பாகங்கள் கழற்றப்பட்டுள்ளன!!

கொழும்பு செப். 1
முன்னாள் ஐ.தே.க. அமைச்சர்கள் தாங்கள் வைத்திருந்த பல உத்தியோகபூர்வ ஆடம்பர வாகனங்களை அந்தந்த அமைச்சிடம் ஒப்படைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒப்படைக்கப்பட்ட வாகனங்களில் இருந்து குளிர்சாதன வசதிக் கருவிகள், வானொலிகள், ஒலிப்பதிவுக் கருவிகள் உட்பட முக்கிய உதிரிப்பாகங்கள் கழற்றப்பட்டு இருந்தன என்று சம்பந்தப்பட்ட அமைச்சுகள் அரசுக்கு அறிவித்துள்ளன.

50 முதல் 60 லட்சம் ரூபா பெறுமதியான புத்தம் புதிய வாகனங்கள் அவற்றில் அடங்குவன. புதிய டயர்கள் கழற்றப்பட்ட நிலையில் ஒப்படைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## ராஜீவ் காந்தி கொலையில் புலிகளுக்கு தொடர்பில்லை

### உயர் நீதிமன்ற சட்டத்தரணி மனு

புதுடில்லி, செப். 01
முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலையில் அடுத்தவைப் புலிகளுக்குப் பங்கு உண்டு என்பது வெறும் ஊகம் தான்.

ஜெயின் ஆணைக்குழுவிடம் தாக்கல் செய்த மனு ஒன்றில் உயர்வு நீதிமன்ற சட்டத்தரணி டாக்டர் பி.எல் வடேரா முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

ராஜீவ் காந்தி கொலைக்குச் சதித்திட்டம் எதுவும் தீட்டப்பட்டதா என்பது குறித்து விசாரித்து கண்டுபிடிக்க மத்திய அரசு உயர் நீதிமன்ற நீதியரசர் ஜெயின் தலைமையில் தனிநபர் ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளது தெரிந்ததே.

அந்த ஆணைக்குழு தற்போது புதுடில்லியில் விசாரணை நடத்திவருகிறது. (ஐ-எ)

## ஹாட்லிக் கல்லூரி நூலக வாரம்

வடமராட்சி, செப். 1
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூல்நிலையம் ஸ்ரீலங்கா படையினரால் தீக்கிரையாக்கப்பட்ட பத்தாம் ஆண்டு நினைவாக இன்று செப்டெம்பர் 1 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதிவரை ஒரு வார காலத்துக்கு நூலகவாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இந்நாளை வாரத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

ஹாட்லிக் கல்லூரியின் நூலகம் கடந்த 85 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி அருகில் முகாமிட்டிருந்த ஸ்ரீலங்கா படையினரால் தீக்கிரையாக்கப்பட்டது. (உ-17)

## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை கொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் திரு. ஐ. சண்முகலிங்கம் ''தமிழிற் பக்திப் பாடல்கள்'' எனும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

கிராம சேவையாளர் திரு. க. இரத்தினம் அறிமுகவுரையை நிகழ்த்துவார். (எ)

உல்லாசப் பயணம் சென்ற

## மினிபஸ் தடம் புரண்டது! 2மாணவர், நடத்துநர் காயம்

### குடத்தனையில் சம்பவம்

வடமராட்சி, செப். 1
வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு உல்லாசப்பயணம் செய்த மாணவர்கள் சென்ற மினிபஸ் தடம்புரண்டதில் நடத்துநரும் இரு மாணவர்களும் படுகாயம் அடைந்தனர். இவர்கள் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குடத்தனை 6 ஆம் கட்டைச் சந்தியில் நேற்றுக் காலை சுமார் 10 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது:

கரவெட்டியில் இருந்து மாணவர்கள் உல்லாசப் பயணம் சென்ற மினிபஸ்ஸே விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் மினிபஸ் நடத்துநரான புலோலி கிழக்கைச் சேர்ந்த எஸ் ஸ்ரீதரன் மாணவர்களான துன்னாலையைச் சேர்ந்த தே. பிரதீப் குமார் (12 வயது), கே. தஷாந்தன் (13 வயது) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர். (ஓ-178-155)

ரஷ்ய ஒப்பந்தம் ரத்து!

## திரிசங்கு நிலையில் பாதுகாப்பு அமைச்சு!

கொழும்பு. செப். 1
ரஷ்ய நிறுவனம் ஒன்றுடன் செய்து கொள்ளப்பட்ட 360 கோடி ரூபா பெறுமதியான ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தத்தை புதிய அரசாங்கம் ரத்துச் செய்ததை அடுத்து, பாதுகாப்பு அமைச்சு திரிசங்கு நிலையில் சிக்கி இருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'அரசாங்கம் ஒப்பந்தத்தை ரத்துச் செய்த உத்தரவை பத்திரிகைகளில் இருந்துதான் அறிந்து கொண்டோம். உத்தியோகபூர்வமாக அந்த உத்தரவு, சம்பந்தப்பட்ட முப்படைகளின் தளபதிகளுக்கும் கிடைக்கவில்லை' — இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்று ஏ. என். 32 ரக போக்குவரத்து விமானங்களை கொள்வனவு செய்வதற்காக ரஷ்யா சென்றுள்ள இலங்கை விமானப்படை அதிகாரிகள் குழு இன்னும் நாடு திரும்பவில்லை. மாஸ்கோவில் தங்கி நிற்கும் இவர்கள் விரைவில் நாடு திரும்புவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

53 மீற்றர் நீள ரோந்துப் படகுகளை வாங்க ரஷ்யா சென்றிருந்த நான்கு பேரைக் கொண்ட இலங்கைக் கடற்படை அதிகாரிகள் குழு அவற்றைப் பார்வையிட்ட பின்னர் கொழும்பு திரும்பியுள்ளது;

ஏற்கனவே ரஷ்யாவிலிருந்து விமான மூலம் கொழும்புக்கு கொண்டு வரப்பட்ட ஆறு பி.எம்.பி. - ரக கவச வாகனங்கள் ரயில் மூலம் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டு விட்டன என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்று எம். ஐ. - 17 ரக போக்குவரத்து ஹெலிக்கொப்டர்கள் தொடர்பான உடன்படிக்கையை முன்னைய அரசு செய்து முடித்து விட்டதாகவும் —

அதன்படி அவை அடுத்த மாதம் கொழும்பு வந்தடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பிரதி அமைச்சர்கள் இன்று பதவியேற்பு

கொழும்பு செப் 1
புதிதாக நியமிக்கப்படும் பிரதி அமைச்சர்களும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க முன்னிலையில் ஜனாதிபதி மாளிகையில் இன்று காலை 9 30 மணிக்கு பதவிப்பிரமாணம் செய்யவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. (உ-3)

## மனித உரிமைகள் ஆணைக்குழு அமைக்க முடிவு

நேற்று அமைச்சரவைக் கூட்டத்தின்போது மனித உரிமைகள் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படுவது சம்பந்தமாக அமைச்சரவை ஆராய்ந்துள்ளது என்று பிரதமர் நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சித்திரவதை, கொடும் தண்டனை என்பன சம்பந்தமான மனித உரிமை பிரகடனத்தை வாஜிதப்படுத்துவதற்கு உடன்பாடு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

அரசுடன்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வகித்தார்.

புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட ஜனாதிபதி விஜேதுங்க முன்வந்து இருப்பது இதன் மூலம் தெளிவாகி இருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ-எ-6)

புலிகளின்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தடையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மக்களை அடக்கி ஒடுக்கி வந்துள்ளனர். — இவ்வாறு அவர் கூறினார். (உ-எ-ச-3-6)


## மரண அறிவித்தல்

### வையாபுரி முருகேசு பூபாலசிங்கம்

காரைநகர் களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், பிறவுண் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான முருகேசு பூபாலசிங்கம் கொழும்பில் காலமானார். அன்னார் அமரர் சபாபதி பிள்ளை முருகேசு, பொன்னம்மாவின் அன்பு புதல்வரும் சிவகுருநாதரின் அன்புக்கணவரும், அமரர் முத்தையா சுப்பிரமணியம், செல்லமுத்து ஆகியோரின் அன்பு மருமகனும் கனகலிங்கம் S.L.R.C கொழும்பு) மகாதேவி, பரமேஸ்வரன், நிர்மலாதேவி, அருள்ராசா, ஞானச்சந்திரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், பாக்கியம், காலஞ்சென்ற S. M. கனகரட்ணம், காலஞ்சென்ற S. M. விஜயரட்ணம், சரஸ்வதி இராசம்மா, இலட்சுமிப்பிள்ளை, அன்னம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாலட்சுமி, பாலசுப்பிரமணியம் (மகாலட்சுமி ஸ்ரோஸ் கொழும்பு), தனலட்சுமி, இராசலட்சுமி, உருத்திரசிங்கம், பாக்கியலட்சுமி (கனடா), சந்தானலட்சுமி (அவுஸ்ரேலியா), யோகராசா, சத்தியலட்சுமி, மீனாம்பிகை(லண்டன்), காலஞ்சென்ற பஞ்சலிங்கம், காலஞ்சென்ற திரவியலிங்கம், பாலாம்பிகை (அவுஸ்திரேலியா) காலஞ்சென்ற தருமலிங்கம், யோகலிங்கம் (உரிமையாளர் காதர்ஸ்ரோஸ் கொழும்பு), கமலாம்பிகை (லண்டன்), ஆகியோரின் சிறிய தந்தையும், காலஞ்சென்ற நடராசா, பரமசாமி, மார்க்கண்டு, காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, கணேசபிள்ளை, மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற சரவணமுத்து, வேலாயுதபிள்ளை (ஆசிரியர் கலாநிதி ஆ.இ.ம.ம வி) திருஞானசம்பந்தன், அன்னலட்சுமி, சரஸ்வதி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01-09-1994 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்குத் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பூ. கனகலிங்கம்
(மகன்)

132/2 பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

(32661)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org